24



உ

ஸ்ரீராமஜயம்.

திருச்சி ஜில்லா

# விபரீத வெள்ளம்.

நேர்த்தியான

பல வர்ணமெட்டுகள் கொண்டது.

இஃது

லா. தா. நொச்சியம்

ஆ. முருகேசவாண்டையார் அவர்களாலும்

திரு ஆனைக்காவல்

T. S. கணேசனாலும்

இயற்றப்பட்டு

திரிசிரபுரம்

...நிலயம் பிரஸ், ஸ்ரீரங்க விலாசத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

O,1MKK,Γ
N24
181294



ஸ்ரீராமஜெயம்.

# திருச்சி ஜில்லா

# விபரீத வெள்ளம்.

### காப்பு. வெண்பா.

அல்லலற வறுக்குமரும் பிணிகளில் தீய்க்கும்
தொல்லையில் பிறவி துளைத்தாட்டும்—எல்லையில்
இன்ப நெறிகாட்டும் இயற்றமிழுமிழ் நாட்டும்
பொன் முகத்தானை துதிப்பார்க்கு.

### விருத்தம். ஆனந்தபைரவி.

ஆயிரத்தித் தொளாயிரத்து இருபத்து நான்காமாண்டில்
ஆனதொரு சூலை பதினெட்டாந்தேதி
வேணதொரு பொருட் சிலவாலுண்டான பாலம்
விதிவசத்தா லிடிந்து வீழ்ந்த விபரஞ் சொல்வேன்.

### நொண்டிச்சிந்து.

இருபத்திநான்காமாண்டில்—உலகெங்குமேகமாய் ஜலம் புரண்டு நிறைந்ததினால்—வழியொன்றுந் தெரியாமல்—ஜனங்கள்—வாடிமனங் கலங்க நதிகள் பொங்க—இது வென்ன காரணமோ—என்று—ஏங்கி மனங்கலங்கித் துயில்கன்று—இருக்கும் நாளதிலே—யாரும்—பொறுக்க முடியாத்துயரான கதை—உரைப்பேன் மடமயிலே—கேளும் உத்தமியே சூலை பதினெட்டாந்தேதி—சென்னைக்கேகும் ரஸ்தாவிலுற்ற—கொள்ளிடத்தின்—சிறப்புள்ள பாலத்தின் விபத்ததனை—என்னவென்றெடுத்துப் புகல்வேன்—இதுவரையிலிப்படி நடந்ததில்லை—எப்புவியிலும்—சொற்பமல்லவே மோட்டார்—சர்வீஸ் நடத்தும் துரிதத்தினாலே பாலங் கலகலத்து—இருந்த நிலைமையறியா—தன்று—எப்போதும்போல பலபேர் வண்டி விடுக்க—அற்புதமாய் பாலம் பிளக்க—பசுபதி—கோவில் வண்டி அப்போது அந்த வழிநடக்க—கேட்டு பீர்சாகிப் கடுக்க—அதனை ஓட்டிவந்த மூவருடன் வண்டியடுக்க—விரிவுண்ட பாலமது—வண்டி வந்த வேகத்தினாலிடிந்து வண்டியும்விழ—பார்த்தவர் மனம்

கலங்க—பரிதவித்து—பரமனருளால் மாட்டின் வாலையும்பற்றி—நீந்திக் கரை ஏறினர்—ஆற்றினில் மாய்ந்திடாமல் மூவர்களும் எருதுடனே—எருது இரண்டுமப்போது—தன்னுட—எஜமானைக் கரையேற்றிவிட்ட பிறகு—பூமியில் விழ்ந்து இறந்த—அந்தபுதுமையை என்ன சொல்வேன் மடமயிலே—(தன)

## ஜனங்கள் வாத்தலைமார்க்கம் சென்ற கஷ்டங்கள்.

பூமிமெச்சிடும் என்ற மெட்டு.

கொள்ளிடநதியினுற்ற வெள்ளத்தின்பிர வாகத்தால்
இடிந்தபாலத்தால் வியா கூலத்தால் அங்கு
கொடுக்கத்தந்தியுமற்று நடக்கவழியுமற்றுப் போனதால்
துயர் வேணதால்
எல்லைக்கடங்காத அல்லல் வந்துற்றதா லேங்கினர்
துயில்நீங்கினர் துயர் பொங்கினர் சில
கோடிஜனங்கள்தங்கள் மாடுகன்றுகளோட்டி ஓடினர்
மேட்டைத் தேடினர்
திருச்சிக்கோட்டைக்கேகும் வடக்கிக்கோட்டைவாச லிதுவாகும்
கேட்டைக்கடந்தேகும்போது மனநோகும் படி.
இரைந்துவாத்தலைவழிவிரைந்துசென்றுமே அந்தக் கரையேகும்
துயர் பெரிதாகும்
ஊசிப்பாலம்நடக்கக் கூசுதாஎன்னுள்ளங் கோதையே
மனவாதையே பெருந் தீதையே உன்னி
ஒன்றும்வழியிலாது சென்றேன்மெள்ளநடந்தப் பாதையே
எந்தன் பேதையே
இருபுறஞ்ஜலப்ர வாகத்தாலென்னுள்ள மேங்குதே
உயிர்நீங்குதேகால் பின் வாங்குதே இலங்கைக்
கேகும்வழியினுற்ற பாம்பன்நதியும் பின் வாங்குதே
அலைக ளோங்குதே
அணைக்கரைவந்துமே எனக்கொன்றுந்தோன்றாமல் சொக்கினேன்
சற்றுருக்கினேன் தெற்கு நோக்கினேன் முருங்கப்
பேட்டைமுற்றிலும் வெள்ளத்தாலழிந்ததைக்கண்டு வெக்கினேன்
வேறு திக்கிலேன்
ஸ்ரீரங்கம்செல்வதற்கென் றெண்ணியேனாலும் சென்றிட
மனங்குன்றிட கால்கள் நின்றிட திரு
மாலனுக்ரஹத்தால் மேலூரைவந்துநான் கண்டிட
துயர் விண்டிட
ஐயனார்க்கோவிலுக் கருகாமையில்கரை ஆபத்து
பெரும்விபத்து கண்டு திகைத்து அதைக்
கடந்துஸ்ரீரங்க மடைந்தேன்கரங்களை குவித்து
ஹரி [illegible] சேவித்து

அன்றங்குதங்கினான் சென்றசிரமத்தை ஒழிந்தேன்
துயின்றெழுந்தேன் மனங் குழைந்தேன் அதை
விட்டுப்புறப்பட் டானைக்காவல்செல்வழி நடந்தேன்
கண்ணீர் சொரிந்தேன்
முருகேசன்பதங்களைகேட்டிட உன்மன முருகுதோ
முகங்கருகுதோ கண்ணீர் பெருகுதோ வேறு
முத்தமிழ்வித்துவங்கற்றிலை குகனருள் பெற்றவ
னன்பிற் குற்றவன்

சஹானா, ரூபகம்.

கண்ணிகள். (அண்ணி மெத்தப்பசியால் என்ற மெட்டு).

திருவானைக்காவலுக்கேகும் ரஸ்தாவிலுற்ற சீர்கேட்டை
என்னசொல்வேன் நானே பெருந்
தீவினையென்றுரைப் பேனே
கிருஷ்ணசாமிநாயக்கர் கட்டியசத்திரத்தின்
கீழ்புரமெல்லாம் நீரோட்டம் கண்டு
நானடைந்தேன் மனவாட்டம்
முனிசிபலாபீசு விபரிதமாகஅன்று
மூடப்பட்டது ஜலத்தாலே அதி
லுள்ளோர்வேரிடஞ்சென்றார் பயத்தாலே
அதைக்கண்டுமனமுளன்று சென்றேன்மெள்ளநடந்து
காணஒண்ணாத பரிதாபம் கரி
கடைசந்திலோடும் ஜலவேகம்
நாகப்பிள்ளைமண்டபம் ஏகலாமென்றாலோ
நடக்கமுடியாதங்கு நீச்சு நீந்தி
கரைஏறினதேபெரி தாச்சு
இந்தஅபகேடுவந்ததில்லை எப்போதும் செந்தா
மரைப்பொற்பாதன்
திருவிளையாடலிதும்
ஜெம்புகேசுரனையம் அம்பாளகிலாண்டத்தையும்
சேவிக்கச்சென்றேன் நான் விரைந்து ஜலம்
மறித்ததே நந்தவனத்தில் இறைந்து
ஆனைக்கடங்காப்பள்ள மாகப்பரித்துவெள்ள மலைகள்
மோதிவரவே கண்டேன் மனக்
கவலைகொண்டங்கு சற்றே நின்றேன்
அந்தமடுக்கடந்தென் சிந்தைமிகவேனைந்து
வந்தேன்முறக்காறத்தெருவு அங்கு
இருந்தவீட்டிற்பல இடிந்துவிழநான்கண்டேன்
இதுவோ இந்தயுகத்தின் முடிவு

## திருவானைக்காவலில் வெள்ளமும் அதனாலங்கு நேர்ந்த அல்லலும்.

செந்தமிழ் உலகினில் என்ற மெட்டு.

காவேரியம்மனுக்குக் கனத்தகோபமுண்டாகி
கடுகிவெள்ளமாய் வாராளே இந்நகர்தனில்
ஆவேசமுடன் வாராளே
கண்டோர்மண்டல பிரளயமென்றுமேவிண்டிட பெண்டிர்குலைநடுங்க
சண்டமாருதம்போ
லோவென்றிரைந்து வாராளே காவேரியம்மாள்
மாவேகத்துடன் வாராளே
தெப்பக்குளம்வழிய இப்போதுநாம்கண்டது அப்பப்பா
புதுமையல்லோ முறக்காரத்தெருவழிந்ததும்
கொடுமையல்லோ
கப்பியபசியினால் கலங்குறுரவர்களும்
எப்போதானிறங்குமோ ஈசுரற்குமனம்
பொக்கென்றுஜலம் வற்றுமோ அவர்களுக்கு
பிழைக்கவழியு முற்றுமோ
எங்குபார்க்கினும்ஜலம் மங்காதுபெருகியே
பங்கப்படுத்துது ஐயோ பட்டணம்ரோட்டை
எங்குமுடைத்ததும் பொய்யோ
செங்கைவளையலணி மங்கையர்தாமும்
அங்கைகூப்பியே சங்கரனைக்கூவும்
சப்தம்நுழைய வில்லையே அம்மாளின்கோபம்
சற்றுந்தணியாத் தொல்லையே
சன்னதிவீதியைநோக்க உன்னதமாய்தோணுது
சாமிசேவிப்ப திங்கேது ஜலத்தின்வேகம்
பூமிதனிற்கால் நில்லாது
மெத்தசங்கடமடைந்துநான் இங்குவந்துற்றதும்
பொங்குதேஆழிபோல் எங்குமேஜலமது
போகவழியேது வேறு சன்னதிவீதி
புதிதாயுண்டான சிற் றுறு
பத்துநாட்களுக்குமேலைந்து நாட்களாகியும்
வற்றுதுஓடுது ஜலம் கோவிலைச்சுற்றி
சற்றுவதில்லையே தடம்
கத்துதுகன்றுகள் தவிட்டுக்குத்தானும்
கலங்குறுர்மானிடர் உணவுக்குமேயே
சித்தமிரங்க வில்லையே இந்நாளில்பாழாய்
ஒத்தத்தெருவும் போகுதே

கல்லணைரோட்டில்நேர்ந்த பொல்லாஉடைப்பிரண்டால்
சொல்லமுடியாத அல்லல் இவ்வூருக்கல்லோ
விள்ளஇயலாத அல்லல்
காவற்காரதெரு வடியோடேபோச்சு
கனத்தகட்டிடங்களு முட்காரலாச்சு
கண்ணைத்திறந்துபார் அம்மா எங்களின்மனம்
புண்ணாகச்செய்வதேன் சும்மா

கல்லினுங்கடினசித்த நெல்லுமண்டிக்காரர்களும்
கடைகளைப்பூட்டி விட்டாரே கலம்பத்தரை
ஆகட்டுமென்று கிட்டாரே
செல்லத்தம்மாள்தர்மம் சிறப்புடன்செய்கிறாள்
இல்லமாய்சத்திரத்தை எல்லோருங்கொண்டனர்
அல்லலும்நீங்கிற்று அன்றே அந்தம்மாளை
எல்லோரும்போற்றுதல் நன்றே

கருமதுரைப்ரிட்டிஷார் தான்கட்டியகொள்ளிடம்பாலம்
கருமவினையோ போச்சு டோல்கேட்டுக்காரர்
கண்கள்கலங்க லாச்சு
மணச்சநல்லூர்செட்டியார் மதிமயங்கலாச்சு
மண்டலமுழுதுமே இதுபெரும்பேச்சு
மோட்டார்கள் ஓய்ந்திட லாச்சு அவைகளின்கஷ்ட
காசம் அடங்கிட லாச்சு

பிழைக்கவழியேயற்று மலைத்தவண்டிக்காரரை
அழைக்குதே அக்கரை யும்மே நோக்கியக்கரை
இழுக்குதவர்களை யும்மே
தக்கபடியவர்கள் பக்குவமாகவே
இக்கணந்தங்களின் குதிரைகளுடனே
அக்கரைநாடுகின் றாரே அவர்களுக்கு
மிக்கதிநேறலா காதே

திருவானைக்காவல்வாசன் சிறுவன்பெயர்கணேசன்
செப்பியசெந்தமிழ் மெட்டு உரைக்கக்கேட்டு
இப்போதேஓர்மனப் பட்டு
மடமடவெனகவி மழையதைசொரிந்திடும்
புலவர்களிதில் பெரும்பிழையிருந்தாலெனைக்
கார்த்துரக்ஷிக்க வேணுமே எந்தனுக்குற்ற
கலக்கமறவே காணுமே

மஞ்சுநிகர்குந்தளமின்ன என்ற மெட்டு.

காவேரிக்குத்தென்புறமுற்ற கரூருரோட்டு வெள்ளத்தால்கெட்டும்
காணலாமங்குமே ஓர்கேட்டு சுங்க
காசுவாங்கிடவ துவில்லாமல் மாசம்ஒண்ணரை ஆகியும்வழி
காணவில்லைஎன்றுகண்ட்ரேக்ட்டு காரர்மனமும்அனுதினமும்
காணஒண்ணுத்துயரம்மேவிட்டு

கம்பரசம்பேட்டைமுற்றிலும் தங்கஇடங்கள் எங்குமிலாது
மங்குறுர்ஜனங்களாங்காங்கு தண்ணீர்
பம்புகுழாவுமின்னாள்பா ழடைந்திட எங்குநோக்கினும் நீர்நிறைந்திட
காணவொண்ணாதபரிதாபம் இந்த அநீதம் எந்தக்காலமும்
வந்ததில்லை யார்விட்டசாபம்
அந்தமுள்ளசிந்தாமணியே கடைவீதியில் இடுப்பளவு
கால்வாய்போல்ஜலமுமோடவே அதை
கடக்கவெண்ணியே இடுக்கண்உற்றவர் கணக்கிலடங்காது
எனக்குந்தெரியாது
காரிழையே அப்பால்நீபாரு சின்னியபிள்ளை சத்திரத்தோரம்
என்னவேகமான பேராறு

## கும்மி.

கும்மியடி பெண்ணே கும்மியடி உந்தன்
கொண்டை கலையவே கும்மியடி
நம்மைப்படைத்துப் புரக்குமந்த நட
ராஜனை நாடியே கும்மியடி. 1

தெங்குகமுகு பலாச்சோலையவை
எங்கு மலிந்த இச்சோணாடு
பாரில் பங்கமுற்றவிதம்
மங்கையே சொல்லுகிறேன் சங்கையில்லாமலே நீ கேட்டு. 2

காற்றுடனே மழைக்கலந்து மின்னாள்
ஊற்றினன் வருணன் மேற்றிசையில்
சாற்றுவேன் கேளடி தையலரே வெள்ளம்
கூற்றுவன்போல் வர நம்நாட்டில். 3

எந்த நாளையிலும் இந்த வெள்ளம்போல
சொந்த நம்நாட்டினில் வந்ததில்லை
என்று பெரியோரும் நன்றாயியம்பியே
நின்று மலைக்குறுர் குன்றைப்போல. 4

வெள்ளத்தினால் நேர்ந்த அல்லலை விள்ள என்
உள்ளமுருகினும் தெள்ளமுதே
வெள்ளை விடையோனருட் கொண்டு யானும்
உள்ளதை உள்ளபடியே சொல்வேன். 5

செத்த மனிதர்கள் பத்தாயிரம்போல
எத்தனையோ மேலைச் சீமையிலே
மெத்தை வீடுகளும் பாழாச்சாமென
கத்துது பேபர்கள் உத்தமியே
குடிக்கக் கஞ்சியுடன் உடுக்கைக்காகவே—நாம்
கூவிப்புலம்பு மின்னாளையிலே
அடுக்குமோ அவனுக்கிவ்விடுக்கண் வந்துற்றது
படுக்க மனமில்லை நீர் பயத்தால். 7
செந்நீர் பெருகினதினாலே அந்த
பொன்னி நதியின் கரைதானும்
பின்னப்படுகுது சென்னை மெயின் ரோட்டுடன்
இன்னலுற்றன கிராமங்களே. 8
கம்பரசம் பேட்டை நம்பியிருந்தோரும்
வெம்புகின்றார்க ளங்கோருடைப்பால்
தெம்புசொல்வதற்கே யாருமில்லை
அந்தபம்புகுழாய் சிஸ்டம்பாழாச்சே 9
உத்தமசேரியை சுத்திதண்ணீர்வந்து
நத்தியேவளைத்துக் கொண்டதினால்
மெத்தையிலேகத்தும் பத்துப்பேரைமீட்க
ஒத்தைப்பரிசலு மாங்குற்றதே 10
இடையாத்துமங்கல முடைப்பதினால்ஜலம்
எகப்ரவாகமாய்ப் புரண்டதினால்
அரியூருதிண்ணியம் அம்பில் கள்ளிக்குடி
அத்தனையும் பாழாச்சுதடி 11
நட்டநடவெல்லாம் பாழாச்சுநாமே
நன்னும்வயல்மணல் மேடாச்சு இதனால்
கெட்டகுடிக ளதிகமடி அந்த
கேட்டையென்னசொல்வேன் மடமயிலே 12
அள்ளிக்குடிக்கவே சுத்தஜலம்த்ரிசிரா
பள்ளியிலில்லாதுபோனதினால்
வெள்ளம்மடிக்கல்லை என்றுமல்லோகால்ரா
கொள்ளைக்கொண்டு போகுதுயிர்களையே 13
கையிலேஓர்தடி மெய்யிலோர்கோவணம்
பையவே ரோட்டினில் நான்நடந்துகண்ட
ஐயன்திருவிளை யாடலையுனக்கும்
அற்புதமாகவெடுத்துச் சொல்வேன் 14
சிந்தாமணிமுதல் கொள்ளிடம்நதிவரை
செப்பலாம் "ஜலக்காடெ" ன்றிப்புவியில்
அந்தமுள்ள ஆனைக் காவலுமேநீரில்
விந்தையே நீந்துவதுதானும் 15

காரத்தெரும் பாழாச்சே சொந்த
ராய்களுமுட் காரலாச்சே அந்தோர்
காரத்தெருவும் தீராச்சே அவர்கள் 16
துந்தொழிலுக்குங் கேடாச்சே
கன்றுகளைத்தான் ஓட்டி உடன்
மக்கள் மனையாளையுங்கூட்டி
நாடுகின்றார்களே ஓடுஞ்சலத்தினில் 17
ஈடில்லாநாதன் இருப்பிடமே
கூடுவிட்டே ஆவிபோய்விடுமோ வென்று
கூக்குரலிடுமேழை ஜனங்கள்
பாடுபட்டே தாமும் தேடியசொத்தையே 18
பத்திரஞ்செய்யும் சிலகோடி
சூலை பதினெட்டாந்தேதியடி அது
வேளை மத்தியான நேரமடி கொள்ளிடம்
பாலம் உடைந்த செய்தியடி இந்த 19
ஞாலத்திலெங்கும் பரவுதடி
போக்கு வரத்தெங்கு மற்றுப்போச்சு அந்த
புகைவண்டித்தொடருமே நிற்கலாச்சு
பாக்கு வெற்றிலைக்கும் கஷ்டமான அந்த 20
பாங்கை என்சொல்வேன் மடமயிலே
எண்ணிறந்த பேர்கள் தண்ணீர் பஞ்சத்தினால்
கண்ணிழந்தாற்போல் கலங்குகிறார்
பண்ணுங்கள் புண்ணியம் கன்னியவான்களே 21
நண்ணுமுங்களை முக்கண்ணனருள்
யானைகுழாக்கள் நிறைந்த திருவானைக்
காவிலேவாழும் மோனையனும்
பாணவயிற்றோனின் நாமம்படைத்தோனும் 22
பகரும் கும்மிதனைப்பாடுங்கடி

கானகத்தில் நாமலைந்து என்ற மெட்டு

ஈசன் திருவிளையாடலித்துடனே நின்றிடாதோ 1
தேசமெங்கும் சீர்குலைந்த தீவினையகன்றிடாதோ
திருச்சி ஜனங்கள்கோடி செத்தனர் விஷபேதியால் 2
குடிக்க சுத்தஜலமே அற்றகொடுமையினால் வந்துற்ற
சவத்தை யெடுத்தீமம் போகசாத்தியப்படாததினால் 3
கொடுத்தார் மனு கலெக்டருக்கு அடித்துமணவாரிக்கேக
ஐபாயிரத்துக்குமேலே அதிகஜனமாண்டதாலே 4
வையகத்திலனைவோரும் வருந்துகிறார் மண்ணின்மேலே
தைப்[illegible] முருகேசனுரையிலே வரும் 5
வையகத்திலுள்ளவர்க்கு வந்துற்ற மனத்துயரும்

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.



# உலகெலாம்
# வாழ்க!